## التاميل Tamil தமிழ்

ஹஜ் மற்றும் உம்ராஒரு கண்ணோட்டம

| | |
|---|---|
| மக்கா அடைந்ததும் - | உம்ரா(தவாப்உல் குதூம்) |
| துல் ஹஜ் எட்டாம் நாள் - | இஹ்ராம் அணிதல் |
| | மினாவில் தங்குதல் |
| துல்ஹஜ் ஒன்பதாம் நாள் - | அராபாத்தில் நிறுத்தம் |
| | முஜ்தலீஃ பாவில் தங்குதல் |
| துல்ஹஜ்பத்தாம் நாள் - | ஷைத்தான் தூண்கல்லெறிதல் |
| | பலிகொடுத்தல் (குர்பானீ கொடுத்தல்) |
| | தலை முடியை சிரைத்தல் |
| | தவாப்உல் இபாதா |
| 11, 12, 13 துல்ஹஜ் - | கல்லெறிவதற்காக மினாவில் தங்குதல் |
| மக்காவிலிருந்து புறபடுதல் - | தவாப்உல் விதா |




**உம்ரா (தவாப்உல் குதூம்)**

மீகாத் அடைந்ததும் இஹ்ராம் அணியும் பொழுது ஒத வேண்டியதுவா

لَبَّيْكَ اللَّهُمَّ بِعُمْرَة

"லப்பைக் அல்லாஹுஃம்ம, பி-உம்ரஹ யா அல்லாஹ்"

**"நான் உன்னிடத்தில் வந்துள்ளேன் உன்னுடைய அழைப்பை ஏற்று உம்ரா செய்கின்றேன்"**

உம்ரா முழுமையாக நிறைவேற்ற முடியாத பயத்தில் ஓதுங்கள –

اللَّهُمَّ مَحِلِّيْ حَيْثُ حَبَسْتَنِي

"அல்லாஹுஃம்ம மஹல்லி ஹைத்து ஹபஸ்தானி"

**" யாஅல்லாஹ்(எங்கு ஏதாவது தடங்கலால் நான் நிறைவேற்ற முடியாத பட்சத்தில்) நீ தடுத்துவிட்டபோது என் இடம் இதுவாகும "**

கிப்லா நோக்கி நின்று கொண்டு ஓதுங்கள –

اللَّهُمَّ هَذِهِ عُمْرَةٌ لاَ رِيَاءَ فِيْهَا وَلاَ سُمْعَة

"அல்லா ஹுஃம்ம ஹாதிஹ்யி உம்ரா லா ரியா பிஹா வலா ஸுஃம்ஹ"

**"யாஅல்லாஹ் இந்த உம்ராவில் முகஸ்துதி, பிறருக்கு காட்டுவது விட்டும் பாதுகாப்பாயாக"**

அதன் பிறகு உரத்த குரலில் தல்பிய்யா ஓதுங்கள்–

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْك، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْك،
إِنَّ الْحَمْدَ وَ النِّعْمَةَ لَكَ وَ الْمُلْكُ لاَ شَرِيْكَ لَك

"லப்பைக் அல்லாஹுஃம்ம லப்பைக் - லப்பைக் லாஷரீகலக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமத லக வல் முல்க் லா ஷரீகலக்"

**"இறைவா நான் வருகை தந்துள்ளேன். இதோ நான்வருகை தந்துள்ளேன். உனக்கு யா தோர் இணையுமில்லை இதோ நான் வருகை தந்துள்ளேன். நிச்சயமாக புகழனைத்தும், பாக்கிய மனைத்தும் உனக்கே சொந்தம். ஆட்சியனைத்தும உனக்கே உனக்கு யாதோர் இணையுமில்லை "**

ஹரம் ஷீர்ஃபின் வாசலில் வலது காலை வைத்து நுழையும் பொழுது ஒத வேண்டியது

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَ سَلِّم،
اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِك

" அல்லாஹுஃம்மா ஸல்லி அலா முஹம்மதின் வஸல்லிம். அல்லாஹுஃம்ம அப்தஹ்லீ அப்வாப ரஹமதிக்"

**"யா அல்லாவஹ் சாந்தியும் ஸலாவாத்தும் ரஸூலுல்லாஹி (ஸல்) மீது உண்டாவதாக யா அல்லாஹ்! உனது அருள் வாயில்களை எனக்கு திறந்தருள்வாயாக"**

தவாஃபுக்காக நிய்யத் செய்தல் அஸ்வத் கல்லிலிருந்து (கருப்புகல்) தவாஃப் ஆரம்பிக்கும் பொழுது ஆண்கள் மட்டும் இஹ்ராமில் மேல் ஆடையை வலது தோள்பட்டை தெரியுமாறு கீழ்பக்கமாக அணியவேண்டும் ஒவ்வொரு முறையும் வலம் வரும் பொழுது ஹஜருல் அஸ்வத் கல்லை நோக்கி வலது கையை உயர்த்தி கூறுவீராக –

اللَّهُ أَكْبَر

"அல்லாஹு அக்பா"(**"அல்லாஹ் மிகப்பெரியவன்"**)

ஏழுமுறை கஃபாவை வலம் வரவேண்டும். ஆண்களுக்கு மட்டும் மூன்று முறை விரைவாக வலம் வர வேண்டும். நான்காவது வலத்தில் இருந்து ஏழாவது வலம் வரை சாதாரணமான வலம் வந்து முடிக்க வேண்டும். தவாஃப் நேரத்தில் எந்த குறிப்பிட்ட துவாவும் இல்லை. ருக்னுல்யமானி (யமனி மூலை) மற்றும் கருப்புகல்லுக்கு இடையில் ஓதுங்கள –

{رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَ فِي الآخِرَةِ
حَسَنَةً وَ قِنَا عَذَابَ النَّار}

" ரப்பனா ஆத்தினா ஃ பித்துன்யா ஹஸனத்தன்வ் வஃபில் ஆகிரத்தி ஹஸத்தன்வ் கினா அதாபன்னர்"

**" எங்கள் இறைவா எங்களுக்கு இவ்வுலகில் நலவை தருவாயாக் இன்னும் மறுமையிலும் நலவை தருவாயாக் மேலும் நரக வேதனையை விட்டு எங்களை காப்பாயாக"**

தோள் பட்டையை மூடி மகாமெ இப்ராஹீம் பின்பக்கம் சென்று -

{وَاتَّخِذُوْا مِنْ مَّقَامِ إِبْرَاهِيْمَ مُصَلًّى}

"வத்தகிது மின் மகாமி இப்ராஹீமாமுஸல்லா"

**"இப்ராஹீமின் இடத்தை தொழுமிடமாக எடுத்துக் கொள்ளுங்கள"**

மகாமெ இப்ராஹீம் இடத்தை தொழுவதற்காக தேர்ந்தெடுக்க வேண்டும். முடிந்தால் மகாமெ இப்ராஹீம் இடத்திற்கு பின் பக்கம் இலலையென்றால் மஸ்ஜிதுல் ஹராமில் எந்த இடத்திலாவது 2 ரகாத் நஃபில் தொழவும். முதல் ரகாத்தில் சூரா காபிரூன். இரண்டாவது ரகாத்தில் சூரா அல் இக்லாஸ்ஓதுங்கள். ஜம் ஜம் தண்ணீர் குடித்து சிறிது தண்ணீர் தலையின் மீது ஊற்றி ஹஜருல்கல்லுக்கு திரும்பவேண்டும் ஹஜருல் அஸ்வதை நோக்கி வலது கையை உயர்த்திகடைசிமுறையாக அல்லாஹு அஃபர் (அல்லாஹ் மிக பெரியவன்) ஸபா இடத்திலிருந்து ஸயி ஆரம்பம் செய்க ஸயி சுமார் ½ கி.மீ. (0 .31மைல்) ஒரு சுற்று மொத்தம் ஏழு சுற்றுகள் சுமார் 3.5 கி.மீ. (2.17மைல்ஸ்)

ஸஃபா மலை அடிவாரத்தில் ஓதுங்கள




{إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللَّهِ فَمَنْ
حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلاَ جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ
بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْراً فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيْم}

"இன்னஸபா வல்மர்வதா மின்ஷாரில்லாஹ்யி ஃபமன் ஹஜ்ஜல் பைத்தா அவிதமரா ஃபலா ஜுனாஹா அலைஹி அன்யத்தவஃப்பா பிஹிமா வமன் ததவ்வா கைரன் ப இன்னல்லாஹ ஷாகிரூன் அலீம்"

**"நிச்சயமாக ஸபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளவையாகும். எனவே எவர் (கஃபாஎனும்) வீட்டை ஹஜ்ஜு அல்லது உம்ரா செய்கிறாரோ அவர்மீது அவ்விரண்டையும் சுற்றுவது குற்றமாகாது. எவர் நன்மையை உபரியாகச் செய்கிறாரோ (அவருக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுபவனாகவும், முற்றும் அறிந்தவனாகவும் இருக்கின்றான்"**

ஸஃபாவும் மர்வாவும் அலலாஹ்வின் சின்னங்கள். ஒவ்வொரு முறையும் ஸஃபாவிலிருந்தும் மர்வாவிலிருந்தும் கஃபாவை நோக்கியவண்ணம் கூறுவீராக –

اَللَّهُ أَكْبَر، اَللَّهُ أَكْبَر، اَللَّهُ أَكْبَر
لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، لَهُ الْمُلْكُ وَ لَهُ الْحَمْدُ يُحْيِي وَ يُمِيْتُ وَ هُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر؛
لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، أَنْجَزَ وَعْدَهُ
وَ نَصَرَ عَبْدَهُ وَ هَزَمَ الأَحْزَابَ وَ حْدَه

" அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்குவலஹுல்ஹம்து யுஹ்யி வயமூது வஹுவ அலா குல்லி ஷையின்கதீர். லா இலாஹா இல்லல்லாஹு வஹதவுலாஷரீக்கலஹு அன்ஜஸா வாதவு வநஸரஅப்தஹு வஹஜமல் அஹஜாப வஹதஹு"

**"அல்லாஹ் மிகப்பெரியவன். அல்லாஹ்மிகப்பெரியவன். அல்லாஹ் மிகப்பெரியவன். அல்லாஹ்வை தவிர வேறு வணங்கப்படுபவன் இல்லை அவனுக்கு இணை இல்லை. ஆட்சி அனைத்தும் அவனுக்கே புகழ் அனைத்தும் அவனுக்கே. அவன் தான் உயிர் கொடுப்பான் இன்னும் மரணிக்கச் செய்வான். இன்னும் அவன் அனைத்து பொருட்களில் மீது சக்தி பெற்றவன். அல்லாஹ்வை தவிர வேறு வணங்கப்படுபவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. அவன் தன் வாக்கை நிறை வேற்றினான். தன் அடியாருக்கு உதவி செய்தான். அனைத்து படைகளையும் அவன் தனியே தோற்கடித்தான்"**

ஸஃபாவிலிருந்து மர்வாவிற்கு ஒரு சுற்றும் மர்வாவிலிருந்து ஸஃபாவிற்கு ஒரு சுற்றும் ஏழுசுற்றும் முடிக்க வேண்டும் ஏழாவது சுற்றுமர்வாவில் முடிக்கவேண்டும். ஸஃபாவிற்கும் மர்வாவிற்கும் இடையில் இருக்கும் இரு பச்சை விளக்குகளின் இடையே ஆண்கள் மட்டும் விரைவாக ஓட வேண்டும் ஸஃபாவிலிருந்து மர்வாவிற்கும் மர்வாவிலிருந்து ஸஃபா விற்கும் முதல் இரண்டாவது தடவை நடக்கும் பொழுது இந்ததுவா ஓதுங்கள

رَبِّ اغْفِرْ وَارْحَم، إِنَّكَ أَنْتَ الأَعَزُّ الأَكْرَم

"ரப்பிக்பிர் வர்ஹம் இன்னக அன்தல் ஆஜுல் அக்ரம்"

**"இறைவா என்னை மன்னித்து கிருபை காடடுவாயாக நிச்சயமாக நீ கண்ணியமானவன். சங்கையானவன்."**

மஸ்ஜிதிலிருந்து புறப்படும்போது இடது காலை வைத்து ஓதும் துஆ-

بسم الله اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَ سَلِّم،
اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِك

" பிஸ்மில்லாஹி அல்லாஹுஃம்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஸல்லிம் அல்லாஹுஃம்ம இன்னி அஸ்அலுக மின் பத்லிக"

**" யா அல்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக யாஅல்லாஹ் உன் இடதில் உன் உபகாரம் வேண்டுகிறேன்"**

**ஆண்கள்:** முழுமையாக தலைமுடியை சிரைக்க வேண்டும் அல்லது சிறிதளவுதலையில் முடியை சமமாக சிரைக்கவும்
**பெண்கள்:** விரலில் மூன்றில் ஒரு பங்கு முனைமுடியை வெட்ட வேண்டும் இஹ்ராம் கலைதல் இத்துடன் எந்த தடையும் இல்லை. துல்ஹஜ் பிறை எட்டு காலை வரை காத்திருக்க வேண்டும்.

### துல்ஹஜ் எட்டாம் நாள்

ஃபஜரிலிருந்து லுஹர் இடைப்பட்ட நேரத்தில் மினாவிற்கு புறப்படவேண்டும். இஹ்ராம் அணிதல். இஹ்ராம் எல்லையை அடைந்தும் ஹஜ் செய்வதற்காக இந்த இஹ்ராம் அணிகிறேன் என்று நிய்யத் செய்து இந்த துவா ஒத வேண்டும -

لَبَّيْكَ اللَّهُمَّ بِحَجّ

"லப்பைக் அல்லாஹுஃம்மபிஹஜ்"

**" யாஅல்லாஹ் இதோ ஹஜ்ஜைக் கொண்டு உன் அழைப்பிற்கு பதில் சொல்லி விட்டேன்"**

எங்கு ஏதாவது தடங்கலால் நான் நிறைவேற்ற முடியாத பட்சத்தில் –

اللَّهُمَّ مَحِلِّيْ حَيْثُ حَبَسْتَنِي

" அல்லாஹுஃம்ம மஹ்லி ஹைத்து ஹபஸ்தானி"

**" யாஅல்லாஹ்(எங்கு ஏதாவது தடங்கலால் நான் நிறைவேற்ற முடியாத பட்சத்தில்) நீ தடுத்துவிட்டபோது என் இடம் இதுவாகும "**

கிப்லாவை நோக்கி ஓதுங்கள -

اللَّهُمَّ هَذِهِ حَجَّةٌ لاَ رِيَاءَ فِيهَا وَلاَ سُمْعَة

" அல்லா ஹும்ம ஹாதிஹி ஹஜ்ஜா லா ரியா பிஹா வலாஸுமாஹ|"

**"யாஅல்லாஹ் இது ஹஜ்ஜாகும். இதில் முகஸ்துதி, பிறருக்கு காட்டுவதை விட்டும் பாதுகாப்பாயாக"**

உரத்த குரலில் தல்பிய்யா ஓதுங்கள்-

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْكَ،
إِنَّ الْحَمْدَ وَ النِّعْمَةَ لَكَ وَ الْمُلْكَ لاَ شَرِيْكَ لَكَ

" லப்பைக் அல்லாஹூம்ம லப்பைக் லப்பைக் லாஷரீகலக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமதலக வல்முல்க் லாஷரீகலக்"

மொழிபெயர்ப்பு முந்தய பக்கத்தில். இத்துடன் சேர்த்து ஓதவும-

لَبَّيْكَ إِلَهَ الْحَقِّ

" லப்பைக் *இலாஹல் ஹக்க* "

**" உண்மையான இறைவா உன் அழைப்பிற்கு பதில் சொல்லி இதோ வந்து விட்டேன் "**

**மினாவில் தங்குதல்**

மினாவில் லுஹர், அஸர், மஃரிப் மற்றும் இஷா (கஸர்) தொழவேண்டும் தனிதனியாக தொழவேண்டும்

**துல்ஹஜ் ஒன்பதாம் நாள் (யவ்முஅரபா)**

அரபாவில் தங்குதல் ஃபஜர் மினாவில் தொழுதபின் சூரிய உதயத்திற்குபின் அமைதியாக தல்பிய்யா ஓதியவாறு அரபாத்திற்குபுறப்படவும்-

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْكَ،
إِنَّ الْحَمْدَ وَ النِّعْمَةَ لَكَ وَ الْمُلْكَ لاَ شَرِيْكَ لَكَ

"லப்பைக் அல்லாஹூம்ம லப்பைக் லப்பைக லாஷரீகலக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமதலகவல் முல்க் லா ஷரீகலக்"

மொழிபெயர்ப்பு முந்தய பக்கத்தில்.

இத்துடன் சேர்த்து கூறவும் -

اللهُ أَكْبَر

"அல்லாஹு அக்பர்" (அல்லாஹ் மிக பெரியவன்)

பிறகு ஜவால் நேரதிற்கு முன் அரபாத் செல்லவும். மஸ்ஜித் நமீரவில் இடம் கிடைக்காவிட்டால் அராபாதில் ஏதோ ஒரு இடதில் கியாம் செய்யுங்கள், அப்படி மஸ்ஜித் நமீராவில் இடம் கிடைதுவிட்டால் ஒரு அஜான் (பாங்கு) இரண்டு இகாமத்துடன் லுகர் அசர் தொழுகைகளை ஒன்று சேர்த்து நிறைவேற்றுங்கள், இரு தொழுகைகளுக்கு நடுவில் வேறு எந்த ஒரு தொழுகையும் தொழாதீர்கள். இதே போல் அசருக்கு பிறகும் எந்த ஒரு தொழுகையும் தொழாதீர்கள். அப்படி மஸ்ஜித் நமீராவில் இடம் கிடைக்காவிட்டால் இரண்டு ஆஜானுடனும் இரண்டு இகாமதுடன் தொழுகயை அந்த அந்த நேரத்தில் நிறைவேற்றுங்கள். ஜவால் ஆனவுடன் உக்கூஃப் ஆரம்பம் செய்யுங்கள். சாயங்காலம் வரை லப்பைக் சொல்லுங்கள், துஆ, தொவ்பா இஸ்திக்ஃபார் கேட்பதிலும், நான்காம் கலிமா ஓதுவதிலும், மனம் வருந்தி துஆ கேட்பதிலும் நேரத்தை செலுத்துங்கள். உக்கூஃப் நின்றுகொண்டு செய்வது சிறந்தது, உட்கார்ந்து செய்வது அனுமதிக்கபட்டது. கிப்லாவை முன்னோக்கி, கைகளை ஏந்தி இதுடன் பலமுறை கூறுங்கள் –

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، لَهُ الْمُلْكُ،
وَ لَهُ الْحَمْد، وَ هُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر

"லா இலாஹா இல்லல்லாஹூ வஹதவு லாஷரீகலஹூ லஹூல் முல்கு வலஹூல் ஹம்து வஹூவா அலா குல்லி ஷையின் கதீர்"

**" அல்லாஹ்வை தவிர வேறு வணங்கப்படுபவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. ஆட்சி அனைத்தும் அவனுக்கே உரியது. புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது. அவன் அனைத்து வஸ்துக்கள் மீது சக்தி பெற்றவன் "**

பிறகு சாயங்காலாம் சூரிய அஸ்தமனம் வரை அங்கே தங்குங்கள். ஆனால் மக்ரிப் தொழுகையை அங்கு தொழாதீர்கள். சூரிய அஸ்தமனதிற்கு பிறகு முஜ்தலீபா புறபடுங்கள்

**முஜ்தலீஃபாவில் தங்குதல்**

மகரிப், இஷா தொழுகையை இணைத்து கஸராக சுருக்கமாக ஒரு பாங்கு இரண்டு இகாமத்துடன் தொழவேண்டும் இதன் இடையில் வேறு தொழுகை கூடாது வித்ர் தொழுகையின் பிறகு வேறு தொழுகை கூடாது. படுக்கைக்கு செல்லவும் இஷா கட்டாய தொழுகையை தொழுதபின் மக்ரிப் தொழுகயின் இரண்டு சுன்னதும் பிறகு இஷாவின் சுன்னதும் வித்ரு தொழுங்கள். துஆவும் ஜிக்ரும் நன்றாக செய்யுங்கள். பிறகு மூக்கடலை அளவு சிறிய கற்களை சேகரியுங்கள் 70 கற்களை ஒவ்வொரு ஆட்களுக்கு சேகரியுங்கள்.

**துல்ஹஜ்பத்தாம் நாள் (யவ்முன் - நஹர்)**

ஃபஜர் முன்னேரத்தில் தொழுது விட்டு மஷ் அருல்ஹரம் புறப்படவும் இயலவில்லை என்றால் அங்கேயே நின்று கொண்டு கிப்லாவைநோக்கிசெவ்வானம் வரும் வரை-
அல்ஹம்துலில்லாஹ் அல்லா ஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹ் கூறி சூரிய உதயத்துக்கு முன் துவா கேட்கவும் –

اَلْحَمْدُ لِلَّه

"அல்ஹம்துலில்லாஹ" - " எல்லா புகழும் இறைவனுக்கே

اللهُ أَكْبَر

"அல்லாஹு அக்பா" - " அல்லாஹ் மிகபெரியவன் "

لاَ إِلَهَ إِلاَّ الله

"லாஇலாஹ இல்லல்லாஹ"

"வணக்கத்திற்க்குரியவன் வேறு யாரும் இல்லை அல்லாஹ்வை தவிர"

சூரிய உதயத்திக்கு முன் அமைதியாக தல்பிய்யா ஓதிய வாறு மினாவிற்குபுறப்படவும்

**ஷைத்தானுக்கு கல்லெறிதல்** ❸

முஜ்தல்ஃபாவில் சூரிய உதயத்திற்கு பின் இரவுவரை இடைபட்ட நேரத்தில் கற்களை எடுத்து கொண்டு ஜமரத்துல் அகபா, அல்குப்ரா கல்லெறிவதற்காக ஷைத்தானை முன் நிறுத்தி மக்காவை இடது பக்கமாக மினாவை வலது பக்கமாக இருக்கும் படி நின்று கொண்டு ஒவ்வொரு கல்லாக அல்லாஹு அக்பர் கூறியவாறு ஏழுகற்களை எறியவேண்டும்–

اللهُ أَكْبَر

"அல்லாஹு அக்பர் "- "அல்லாஹ் மிகபெரியவன்"

ஷைத்தான் கல் எறிந்தவுடன் லப்பைக் சொல்வதை நிறுத்திவிடுங்கள் பிறகு துஆ விற்காக நிற்காதீர்கள் உங்கள் தங்குமிடதிற்கு வந்து விடுங்கள். பிறகு குர்பானி கொடுங்கள்.

**குர்பானீ கொடுத்தல**

அரசாங்கத்தின் குர்பானீ டிக்கட் வாங்கவில்லை என்றால் அமைதியாக மினாவில் உள்ள குர்பானீ கொடுக்கும் இடத்திற்கு அல்லது வேறு ஏதாவது குர்பானீ கொடுக்கும் இடத்திற்கு சென்று பின்வரும் துவா ஓதி குர்பானீ கொடுக்கவேண்டும்-

بِسْمِ اللهِ وَ اللهُ أَكْبَر
اللَّهُمَّ إِنَّ هَذَا مِنْكَ وَ لَكَ اللَّهُمَّ تَقَبَّلْ مِنِّي

"பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர் அல்லாஹூம்ம இன்னஹாத மின்க வலக அல்ஹம்து தகப்பல் மின்னி"

**"அல்லாஹ்வின் பெயர் கொண்டு ஆரம்பிக்கின்றேன். அல்லாஹ் மிகப்பெரியவன்**

**யா அல்லாஹ் இது உன்னிடமிருந்து வந்தவை. உனக்கே உரியவை. என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக"**

✂ **தலை முடி சிரைத்தல்**

குர்பானீ கொடுத்தபின் ஆண்கள் மொட்டை போடுவது அல்லது தலை முடியை சீராக ஒரே அளவாக குறைத்து கொளளவும் பெண்கள்: ஒரு விரலில் மூன்றில் ஒரு பங்கு நீளம் முனை முடியை வெட்டி கொள்ளவும் இஹ்ராம் கலைதல் இத்துடன் உடலுறவு தவிர எந்த தடையும் இல்லை. அமைதியாக தாவாபுல் இபாதா செய்வதற்காக மக்கா புறப்படவும்.

**தவாபுல் ஜியாரத்**

இப்பொழுது தவாஃபே ஜியாரத் செய்யுங்கள். இதன் நேரம் 10 ல் இருந்து 12 ம் துல் ஹாஜ்ஜாவின் சூரிய அஸ்தமனம் வரை பகலிலோ இரவிலோ எப்பொழுது வேண்டுமானாலும் செய்யுங்கள். பொதுவாக 11 ம் துல் ஹாஜ்ஜில் எளிதாக இருக்கும்(தவாபுல் ஜியாரத்தின் வழிமுறை உம்ராவின் தவாபை போன்றதாகும்)அத்துடன் தவாஃப் வதுவுடன் செய்யவேண்டும்.இதற்கு இஹ்ராம் தேவயில்லை. மஸ்ஜிதே ஹரமில் வலது காலை வைத்து இத் துஆவுடன் நுழையவும்

"அல்லாஹூம்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஸல்லிம். அல்லாஹூம்ம அப்தஹ்லீ அப்வாப ரஹமதிக."

இதற்குபின் தவாஃப் செய்யுங்கள், தவாஃபின் வழிமுறை 1 ம் பக்கத்தில் உள்ளது.நோட்: பின் தவாஃப் முடிந்தவுடன் ஸ்டேஷன் இப்ராஹீம் சென்று தவாஃபின் இரண்டு ரக்காத்துகள் நபில் தொழுகை நிறைவேற்றுங்கள்.பிறகு சஃபா மர்வா மத்தியில் ஸயீ செய்யுங்கள். ஸயீ செய்வதின் வழிமுறை 1 ம் பக்கத்தில் உள்ளது. இப்பொழுது உங்களுடைய இஹ்ராம் துறந்துவிடலாம். அத்துடன் அனைத்து தடைகளும் முடிந்து விட்டன. கணவன் மனைவி ஒன்றாக இருக்கலாம். மஸ்ஜிதிலிருந்து வெளியேரும் பொழுது இடது காலை வைத்து இந்த துஆ ஓதுங்கள்

"அல்லாஹூம்ம ஸல்லி அலா முஹம்மதின் வஸல்லிம் அல்லாஹூம்ம இன்னி அஸ்அலுக மின் பத்லிக "

இதன் மொழிபெயர்ப்பு 1 ம் பக்கத்தில் உள்ளது

**11 மற்றும் 12ம் நாள துல்ஹஜ்**

கல்லெறிவதற்காக மினாவில் தங்குதல்

❸❷❶

சூரியன் உச்சியில் இருககும் நேரத்திலிருந்து (ஜவால் நேரம்) இரவு வரை மூன்று ஷைத்தான்களுக்கும் ஒரு நாளைக்கு 21 கல்எறிய வேண்டும் ஸுக்ரா என்னும் மிக சிறிய ஷைத்தான் முன்வைத்து மக்கா இடது பக்கமாக மினா வலது பக்கமாக கொண்டு ஒவ்வொரு கல்லாக அல்லாஹு அக்பர் கூறியவாறு எறிய வேண்டும். முதல் ஷைத்தான் கல்லெறிந்த பிறகு கிப்லாவை நோக்கி நின்று கொண்டு உங்கள் மனம் போல் அல்லாஹவிடம் கையேந்திதுவா கேட்கவும் பிறகு அமைதியாக இரண்டாவது ஷைத்தான் (நடுவில் இருக்கும் ஷைத்தான்) ஜம்ரா அல்-உஸ்தா (நடுவில் இருக்கும் ஷைத்தான்) முன்வைத்து மக்கா இடது பக்கமாக மினா வலது பக்கமாக கொண்டு ஒவ்வொரு கல்லாக அல்லாஹு அக்பர் கூறியவாறு எறிய வேண்டும். கிப்லாவைநோக்கி நின்று கொண்டு உங்கள் மனம்போல் அல்லாஹ் விடம் கையேந்தி துவா கேட்கவும் பிறகு அமைதியாக மூன்றாவது ஷைத்தான் அகபா அல்-குப்ரா (மூன்றாவது ஷைத்தான்) முன்வைத்து மக்கா இடது பக்கமாக மினாவலது பக்கமாக கொண்டு ஒவ்வொரு கல்லாக அல்லாஹு அக்பர் கூறியவாறு எறிய வேண்டும். துவா கேட்காமல் அங்கிருந்து திரும்பி விடவும் துல்ஹஜ் 12ம் நாள் ஷைத்தான்களுக்கு கல்லெறிந்த பிறகு மினாவிலிருந்து மக்காவிற்கு தவாபுல்விதா (பிரியாவிடை) செய்வதற்காக உங்களுடைய கடைசி கடமை செய்வதற்காக அமைதியாக புறப்படவும்.

**தவாபுல்விதா**

ஹஜ் முடிந்தவுடன் மக்காவிலுருந்து நாடு திரும்பும் எண்ணம் இருந்தால் தவாபுல் விதா வாஜிப் ஆகும். மஸ்ஜிதே ஹரமிற்குள் வலது காலை வைத்து நுழயவும் பின் தவாபுல் விதா செய்யவும். தவாபின் வழிமுறை 1 ம் பக்கத்தில் உள்ளது. தவாபுல் விதா முடிந்தவுடன் ஸ்டேஷன் இப்ராஹீம் சென்று தவாஃப் இன் இரண்டு ரக்காத்துகள் நபில் தொழுகை நிறைவேற்றுங்கள் அங்கு இயலவில்லை என்றால் வேறு எங்காவது ஹரம்ஷரீபில் இரண்டு ரகாக் நஃபில் தவாபுல்விதா செய்வதற்காக தொழவேண்டும் இத்துடன் உங்கள் ஹஜ்கடமை நிறைவேறியது நீங்கள் நிம்மதியாக வீடு திரும்பலாம் ஹரம் ஷரீபில் இருந்து இடது காலை வைத்து வெளியேறும் பொழுது.–

"அல்லாஹூம்ம ஸல்லி அலா முஹம்மதின் வஸல்லிம் அல்லாஹூம்ம இன்னி அஸ்அலுக மின் பத்லிக "

"யா அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக இறைவா நிச்சயமாக நான் உன் அருளை உன்னிடம் கேட்கின்றேன்."

ஹஜ் பயணம் செல்வதற்கு முன் எல்லா கடனையும் நிறைவேற்றுங்கள் இல்லை மன்னித்துவிடுங்கள். மக்களுடைய ஹுகூகை (கடமை) நிறைவேற்றுங்கள். பின் உயில் தயாரித்து எழுதி விடுங்கள்

அதிக பிரதிகளுக்கு டோடர்புகொள்ளுங்கள்:
The Islamic Bulletin, PO Box 410186, San Francisco, CA 94141-0186 USA ♦E-Mail: info@islamicbulletin.org
www.islamicbulletin.org (Enter Here ♦ Hajj ♦ Tamil)
التاميل Tamil தமிழ்